05.04.2025

OS No: 120/2017

வா.சா.2 திரு. ரம்சான்அலி , த/பெ. முகமது ராவுத்தர்

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் மலேசியாவில் ரெஸ்ட்ரான்ட்ல் வேலை பார்க்கிறேன். வாதி நாச்சியப்பன் அழைத்ததன் பேரில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நிருபணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் வழக்கறிஞர் அலுவலகத்தில் டைப் செய்யப்பட்டு அங்கு நான் சென்று கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். நிருபணவாக்குமூலத்தில் கையெழுத்து செய்த அன்று தான் முதல் முதலாக வழக்கறிஞர் அலுவலகத்திற்கு நான் சென்றேன் என்றால் சரிதான். எனது நிருபணவாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் வழக்கறிஞருக்கு வாதி நாச்சியப்பன் சொல்லி டைப் செய்யப்பட்ட பிறகு அதில் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். வாதி, பிரதிவாதி ஆகியோரை எனக்குத் தெரியுமா என்றால் தெரியும், இருவரும் எனக்குப் பழக்கம். நான் சாட்சி கையெழுத்து எந்த அலுவலகத்தில் செய்து கொடுத்தேன் என்றால் ஆவண எழுத்தர் அலுவலகத்தில் செய்து கொடுத்தேன். சார்பதிவாளர் முன்னிலையில் நான் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி மணியரசன் வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரத்தில் எத்தனை கையெழுத்துக்கள் செய்தார் என்றால் மணியரசன் கையெழுத்து செய்த சமயத்தில் நான் அலுவலகத்திற்கு வெளியே இருந்தேன் எத்தனை கையெழுத்து செய்தார் என்று எனக்கு நினைவில்லை. நான் வாதிக்கு வேண்டிய நபர் என்றும் வாதி அழைத்ததன் பேரில் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.04.05 18:22:14 +0530